1983 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி : '' 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 27 வரை அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிக்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் : '' 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 19/1983) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(பிற்பகல் 1.20)

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுத்த முடிவுகளுக்கு இணங்க, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு, திருத்தியமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

11–2–1983 (வெள்ளிக்கிழமை)	அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
	(மாலை பேரவைக்கூட்டம் இல்லை).
12–2–1983 (சனிக்கிழமை) ..	அரசினர் சட்ட முன் வடிவுகள்—ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
3–2–1983 (ஞாயிற்றுக்கிழமை)	விடுமுறை.

14–2–1983 (திங்கட்கிழமை) .. அரசினர் சட்ட முன் வடிவுகள்— ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

(தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்).

15–2–1983 (செவ்வாய்க்கிழமை) தனியார் அலுவல்கள்.

பேரவை வழக்கம் போல் காலை 9 மணிக்குக்கூடும்.

இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவுப்படி, பேரவைக் கூட்டம் 15–2–1983 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் தெரிவித்த ஒருமித்த கருத்துக்கிணங்கவும் என்னுடைய கருத்துக்கிணங்கவும் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்பி அழைக்கின்றேன்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்— தொடர்ச்சி

(ஊ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1983.

(எ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1983.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவு சம்பந்தப்பட்ட அவசரச் சட்டத்தை இப்பேரவை நிராகரிக்கிறது என்ற தீர்மானத்தைக் கொடுத்திருந்த திரு. அ. ரகுமான்கான் அவர்கள் இருக்கையில் இல்லை, ஆகவே, அது எடுத்துக்கொள்ளப் பெறவில்லை.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

‘‘ தமிழ்நாடு 1983-ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு*! (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1983) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.’’

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்தச் சட்ட முன்வடிவு வையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

---

*1983–ம் ஆண்டு பிப்ரவரி 8–ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.